அதானி விவகாரம் தனிப்பட்டது அல்ல; தேசத்தைப் பற்றியது

ராகுல் காந்தி

ரே பரேலியில் தொண்டர்களைச் சந்தித்த மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி.

ரே பரேலி, பிப். 21: தொழிலதிபர் அதானி விவகாரம் தனிப்பட்டது அல்ல; தேசத்தைப் பற்றியது என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள தனது மக்களவைத் தொகுதியான ரே பரேலியில் ராகுல் காந்தி இரண்டு நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அங்குள்ள லால்கஞ்ச் பகுதியில் இளைஞர்களிடையே அவர் வெள்ளிக்கிழமை உரையாற்றினார். அப்போது ராகுல் கூறியதாவது:

பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் அமெரிக்கப் பயணம் மேற்கொண்டபோது செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம் அதானி விவகாரம் தொடர்பாக அதிபர் டிரம்ப்பிடம் பேசினீர்களா என்று கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர் 'இது தனிப்பட்ட விவகாரம். இது போன்ற விவகாரங்கள் இரண்டு உலகத் தலைவர்களிடையிலான சந்திப்பின்போது விவாதிக்கப்படுவதில்லை' என்று தெரிவித்தார்.

மோடி அவர்களே, அதானி விவகாரம் தனிப்பட்ட விவகாரம் அல்ல; அது தேசத்தைப் பற்றியது. தொழிலதிபர் அதானி தனது நண்பர் என்றும் அவரைப் பற்றி டிரம்பிடம் எதுவும் கேட்கப்போவதில்லை என்றும் அமெரிக்க செய்தியாளர்களிடம் மோடி கூறியுள்ளார்.

அமெரிக்காவில் அதானிக்கு எதிராக ஊழல் மற்றும் திருட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. ஆனால் அது தனிப்பட்ட விவகாரம் என்றும் அது பற்றி நாங்கள் பேசப் போவதில்லை என்றும் பிரதமர் கூறுகிறார். அவர் உண்மையிலேயே இந்தியாவின் பிரதமராக இருந்திருந்தால் இந்த விவகாரம் குறித்து டிரம்பிடம் கேட்டிருப்பார். தேவைப்பட்டால் அமெரிக்காவுக்கு விசாரணைக்காக அதானியை அனுப்பியிருப்பார்.

உத்தர பிரதேசத்தில் அமைந்துள்ளதாகக் கூறப்படும் இரட்டை என்ஜின் அரசு ஒரு தோல்வியாகும். இங்குள்ள அரசிடம் என்ஜினே இல்லை.

இந்த மாநில மக்கள் பணவீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் இம்மாநில அரசிடம் அவற்றுக்கான தீர்வுகள் இல்லை.

வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. அதற்கு பாஜக அரசுதான் காரணம். இளைஞர்கள் கல்வி பயின்றுள்ளனர். எனினும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாததற்கு பிரதமர் நரேந்திர மோடி பணமதிப்பிழப்பு நடவடிக்கையை அமல்படுத்தியதுதான் காரணம். அந்த நடவடிக்கையானது சிறு வர்த்தகங்களைச் சிதைத்துவிட்டது. ஊழல், அதானி, அம்பானிக்கு இடையிலான தொடர்பை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

உங்களுக்கு வேலை வேண்டும் என்றால் சிறிய வர்த்தகங்களுக்குப் புத்துயிரூட்டி பாதுகாப்பதே அதற்கான முதல் நடவடிக்கையாகும். ஜிஎஸ்டி வரிவிதிப்பை மாற்ற வேண்டியுள்ளது. உங்களுக்காக வங்கிகள் கதவுகளைத் திறக்காத வரை வேலைவாய்ப்புகளுக்கு சாத்தியமில்லை.

மத்திய அரசு தனியார்மய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. உத்தர பிரதேச மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சியை மக்கள் தேர்ந்தெடுத்தால் அந்த அரசு வேலைவாய்ப்புகளை உருவாக்கும். காங்கிரஸ் ஆட்சி அமைந்த கர்நாடகத்திலும் தெலங்கானாவிலும் இது நடந்துள்ளது என்று ராகுல் காந்தி பேசினார்.

தொண்டர்களுடன் சந்திப்பு: ரே பரேலி தொகுதியில் பியூமாவ் பகுதியில் உள்ள தனது இல்லத்தில் காங்கிரஸ் தொண்டர்களை ராகுல் காந்தி சந்தித்துப் பேசினார். தலித்துகள் தொடர்புடைய விவகாரங்கள் உள்பட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக அவருடன் தொண்டர்கள் விவாதித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது, உத்தர பிரதேசத்தில் வரும் 2027 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளைத் தொடங்குமாறு காங்கிரஸ் தொண்டர்களை ராகுல் காந்தி கேட்டுக் கொண்டார்.

தில்லியில் பாஜகவின் 'ஆதரவு' அணியாக செயல்பட்டது காங்கிரஸ்

ராகுலுக்கு மாயாவதி பதிலடி

லக்னௌ, பிப். 21: தில்லி சட்டப் பேரவைத் தேர்தலில் பாஜகவின் 'ஆதரவு' அணியாக (பி டீம்) காங்கிரஸ் செயல்பட்டது என்று அக்கட்சி எம்.பி. ராகுல் காந்திக்கு பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி பதிலடி கொடுத்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற தில்லி சட்டப் பேரவைத் தேர்தலில் பாஜக அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. தொடர்ந்து இருமுறை வெற்றி பெற்ற ஆம் ஆத்மி தோல்வியைத் தழுவியது. காங்கிரஸ் ஓரிடத்தில் கூட வெல்லவில்லை. எதிர்க்கட்சி அணியில் காங்கிரஸும், ஆம் ஆத்மியும் தனித்தனியாக போட்டியிட்டது பாஜகவின் வெற்றியை எளிதாக்கியதாக அரசியல் வல்லுநர்கள் கருத்து தெரிவித்தனர்.

இந்நிலையில் தனது சொந்த தொகுதியான உத்தர பிரதேசத்தின் ரேபரேலியில் இரு நாள் பயணம் மேற்கொண்ட ராகுல் காந்தி, 'மக்களவைத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் 'இண்டி' அணியில் மாயாவதி இணையாதது ஏமாற்றத்தை அளித்தது.

அவர் வேறு சில காரணங்களுக்காக எங்கள் அணியில் இணைய மறுத்துவிட்டார்.

உத்தர பிரதேசத்தில் அவர் எங்களுடன் இணைந்திருத்தால் பாஜக முழுமையாக தோற்கடிக்கப்பட்டிருக்கும்' என்று கூறியிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் மாயாவதி 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'அண்மையில் நடைபெற்ற தில்லி சட்டப் பேரவைத் தேர்தலில் பாஜகவின் 'ஆதரவு' அணியாக காங்கிரஸ் போட்டியிட்டது என்ற கருத்து உள்ளது. அதன் காரணமாகவே பாஜக தில்லியில் ஆட்சி அமைக்க முடிந்தது.

இதைவிட மோசமான தோல்வியைச் சந்திக்க முடியாது என்ற சாதனையை ஒவ்வொரு தேர்தலிலும் காங்கிரஸ் படைத்து வருகிறது. பல தொகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர்கள் வைப்புத் தொகையைக் கூட இழந்து விட்டனர்.

பிற கட்சிகளை விமர்சிப்பதற்கு முன்பு நாம் எவ்வாறு நடந்து கொள்கிறோம் என்பதை காங்கிரஸ் தலைவர் (ராகுல்) கருத்தில் கொள்ள வேண்டும்' என்று கூறியுள்ளார்.

மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார் சோனியா

புது தில்லி, பிப். 21: தில்லி சர் கங்கா ராம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி (78) வெள்ளிக்கிழமை வீடு திரும்பினார்.

இது தொடர்பாக தக வலறிந்த வட்டாரங்கள் கூறுகையில், 'வழக்கமான மருத்துவ பரிசோதனைகளுக்காக, சர் கங்கா ராம் மருத்துவமனையில் சோனியா காந்தி (78) வியாழக்கிழமை காலையில் அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவர்கள் குழு அவரது உடல்நிலையை பரிசோதித்தது. பின்னர், மருத்துவமனையில் இருந்து அவர் வெள்ளிக்கிழமை வீடு திரும்பினார்' என்றன.

ராஜஸ்தானில் இருந்து மாநிலங்களவை எம்.பி.யான சோனியா காந்தி, நாடாளுமன்ற காங்கிரஸ் குழுத் தலைவராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரூ.2,500 நிதி உதவித் திட்டம்:முதல் அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்காதது ஏன்?

தில்லி அரசுக்கு அதிஷி கேள்வி

நமது நிருபர்

புது தில்லி, பிப்21: தில்லி அரசு அதன் முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் நகரப் பெண்களுக்கு ரூ.2,500 நிதி உதவி வழங்கும் திட்டத்தை ஏன் நிறைவேற்றவில்லை என்று ஆம் ஆத்மி கட்சியின் மூத்தத் தலைவரும், கால்காஜி தொகுதி எம்எல்ஏவுமான அதிஷி வெள்ளிக்கிழமை கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், புதிதாக பொறுப்பேற்றுள்ள பாஜக அரசு பிரதமர் நரேந்திர மோடியின் மகிளா சம்ரிதி யோஜனாவின் கீழ் பெண்களுக்கு நிதி உதவி வழங்குவதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பாக அதிஷி செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை கூறியதாவது: தில்லி தேர்தலுக்கு முன்னர் பிரதமர் மோடியும், பாஜக தேசியத் தலைவர் ஜெ.பி. நட்டாவும் வெற்றி பெற்றால் முதல் அமைச்சரவைக் கூட்டத்திலேயே மகளிருக்கான இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படும் என்றும், தில்லியில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் மார்ச் 8-ஆம் தேதிக்குள் தங்கள் வங்கிக் கணக்கில் ரூ.2,500 பெறுவார்கள் எனவும் உறுதியளித்தனர்.

ஆனால், வியாழக்கிழமை நடைபெற்ற முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் அத்தகைய திட்டம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள முதல்வர் ரேகா குப்தா எடுத்த முதல் முடிவு அந்த வாக்குறுதிக்கு துரோகம் செய்வதாக உள்ளது. இந்த உதவித்தொகை எப்போது மகளிரின் கணக்குகளில் வரவு வைக்கப்படும்? இது மற்றொரு தேர்தல் தந்திரமா? என்று அவர் கேள்வி எழுப்பினார்.

ஆம் ஆத்மி கட்சியும் பாஜகவும் தேர்தலுக்கு முன்னதாக பெண்களுக்கு மாதாந்திர நிதி உதவி அளிப்பதாக உறுதியளித்தன. மேலும், இது பிரசாரத்தின் போது அதிகம் விவாதிக்கப்பட்ட பிரச்னையாகவும் இருந்தது. பிப்.8-ஆம் தேதி தில்லியில் ஆம் ஆத்மி கட்சி ஆட்சியை இழந்த பிறகு மறுதினம், கட்சியின் தலைவர் அரவிந்த் கேஜரிவால் தனது இல்லத்தில் கட்சியின் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 22 எம்எல்ஏக்களை சந்தித்தார்.

இக்கூட்டத்தைத் தொடர்ந்து, அதிஷி கூறுகையில், 'பாஜக அளித்த வாக்குறுதியின்படி, மார்ச் 8 ஆம் தேதிக்குள் பெண்களுக்கு மாதம் ரூ.2,500 வழங்குவதையும், 300 யூனிட் இலவச மின்சாரம் வழங்குவதையும், மக்களுக்கு பிற வசதிகளைத் தொடர்வதையும் ஆம் ஆத்மி கட்சி உறுதி செய்யும்' என்று தெரிவித்திருந்தார்.

வெள்ளிக்கிழமை செய்தியாளர் சந்திப்பின்போது, வரும் சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் 14 சிஏஜி அறிக்கைகளை தாக்கல் செய்வதற்கான புதிய அரசின் முடிவு குறித்து செய்தியாளர்கள் கேட்டபோது, 'அது ஒரு வழக்கமான பணியாகும். நான் முதல்வராக இருந்தபோது, சிஏஜி அறிக்கையை அப்போதைய பேரவைத் தலைவர் ராம் நிவாஸ் கோயலுக்கு அனுப்பியிருந்தேன். இது செயல்முறையின் ஒரு பகுதியாகும்' என அதிஷி பதிலளித்தார்.

வியாழக்கிழமை நடைபெற்ற புதிதாக அமைக்கப்பட்ட தில்லி அமைச்சரவையின் முதல் கூட்டத்தில், தலைநகரில் ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. மகிளா சம்ரிதி யோஜனா குறித்து விவாதிக்கப்பட்டது. 8-ஆவது சட்டப்பேரவையின் முதல் அமர்வில் நிலுவையில் உள்ள 14 சிஏஜி அறிக்கைகளை தாக்கல் செய்யவும் முடிவு செய்யப்பட்டது.

முகப்பேர் II கிளை (DP 16112)
128, வெள்ளாளர் தெரு, VGP நகர், முகப்பேர் மேற்கு, சென்னை-600037
Mob: 94443 96493 Email: cb16112@canarabank.com
Canara Bank கனரா வங்கி

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6)/9(1) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

கனரா வங்கி, முகப்பேர் II கிளையில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்து கனரா வங்கி-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து பெற வேண்டிய கடன் தொகையான **31.12.2024** அன்றுள்ளபடி ₹ **32,96,264.57** (ரூபாய் முப்பத்து இரண்டு லட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து இருநூற்று அறுபத்து நான்கு மற்றும் பைசா ஐம்பத்து ஏழு மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளை கனரா வங்கி-ன், முகப்பேர் II கிளை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்று அடிப்படையில் **25.03.2025** அன்று காலை **11.30** மணி முதல் மதியம் **12.30** மணி வரை விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்/ஜாமீன்தாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்: M/s எஸ் எஸ் பேக்கேஜிங், அதன் சார்பாக அதன் உரிமையாளர்: Mr.T யோகராஜ், (இனி இவர் கடன்தாரர் என அழைக்கப்படுவார்) மனை எண்.80 மற்றும் 81, M K B நகர், திருமுடிவாக்கம், சென்னை, தமிழ்நாடு-600044, **உரிமையாளர்:** Mr.T.யோகராஜ், S/o.திருமாறன் E. **ஜாமீன்தாரர்/அடமானதாரர்:** Mr.திருமாறன்.E, S/o.D.எத்திராஜன் மற்றும் **சக-கடன்தாரர்:** Mrs.சாந்தி திருமாறன், W/o.திருமாறன், **அனைவரது முகவரி,** மனை எண்.1/225, TNHB, 1வது ப்ளாக், 2வது தெரு, முகப்பேர் மேற்கு, முகப்பேர் SO, சென்னை, தமிழ்நாடு - 600037.

சொத்து விவரம்

(Mr.E.திருமாறன்-க்கு சொந்தமான சொத்து)

சர்வே எண்.584 பகுதி, சென்னை நகர்ப்புற வளர்ச்சி திட்டம்-II, **மனை எண்.1/225, B ஸ்டப், J.J.நகர் மேற்கு (முகப்பேர் மேற்கு), முகப்பேர் கிராமம், அம்பத்தூர் தாலுகா, சென்னை மாவட்டம்** என்னும் முகவரியில் **468 சதுர அடி நிலம், அதிலுள்ள கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: மனை எண்.1/224, மேற்கு: மனை எண்.1/226, வடக்கு: ரோடு, தெற்கு: மனை எண்.1/275 & 1/276.

குறைந்தபட்ச கேப்பு விலை: ₹ **44,08,000/-;** டேவணித்தொகை: ₹ **4,40,800/-;** ஏல உயர்வுத்தொகை: ₹ **10,000/-**

டேவணித் தொகையினை **24.03.2025** அன்றோ அல்லது அதற்கு முன்னோ மாலை 4.00 மணிக்குள் செலுத்த வேண்டும்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் முன் அனுமதி பெற்று சொத்தினை பார்வையிட தேதி மற்றும் நேரம் **20.03.2025** லிருந்து **24.03.2025** வரை காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

EMD amount of 10% of the Reserve Price is to be deposited by way of Demand draft in favour of Authorized Officer, Canara Bank, Mogappair II Branch OR shall be deposited through RTGS/NEFT/Fund Transfer to credit of account of Canara Bank, Mogappair II Branch, Chennai A/c No.209272434 IFSC Code: CNRB0016112

விற்பனையின் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணைய தளத்தில் (www.canarabank.com) வழங்கப்பட்ட மின் ஏலம் என்ற இணையப் பார்க்கவும் அல்லது வங்கியின் சேவை வழங்குனர் BAANKNET (M/s PSB Alliance Pvt. Ltd), (Contact No. 70466 12345 / 63549 10172 / 82912 20220 / 98922 19848 / 81602 05051, Email:support.baanknet@psballiance.com)-ல் தொடர்பு கொள்ளவும் மேலாளர், கனரா வங்கி, முகப்பேர் II கிளை, (Mob: 94443 96493) எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

Portal of E-Auction: https://baanknet.com

தேதி : 20.02.2025, இடம்: சென்னை — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கனரா வங்கி

Arcil Premier ARC

அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட் (ஆர்சில்) CIN - U65999MH2002PLC134884 | இணையத்தளம்: https://auction.arcil.co.in

பல்வேறு ஆர்சில் - ட்ரஸ்ட்களின் அறங்காவலராக செயல்படுவது.
ஆர்சில் அலுவலகம் - தி ரூபி, 10 வது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு) மும்பை - 400 028
கிளை அலுவலகம் - 1G, 1 வது தளம், சென்சுரி ப்ளாசா, எண். 560-562, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018

பிணைச்சொத்து பாதுகாப்பு மற்றும் நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் '2002 (சர்ஃபாசி சட்டம்) - உடன் படிக்க – பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதிகள் 6, 8 & 9 ன் கீழான அதிகாரங்களை செயலுறுத்தி, ஆன்லைன் மின்னணு ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுவதற்கான பொது அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், (பதிவு செய்யப்பட்ட பணி ஒப்படைவு ஒப்பந்தம் / ஒப்பந்தங்களின் கீழ், பணி ஒப்படைவு செய்யப்பட்டதற்கிணங்க) பல்வேறு **ஆர்சில் ட்ரஸ்ட்களின் ("ஆர்சில்")** ன் அறங்காவலராக செயல்படும் **அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட் (ஆர்சில்)** க்கு அடமானம் செய்யப்பட்டு / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்து/க்கள், இதன் கீழ்க்கண்ட விபரங்களின் படியிலான நிலுவைத்தொகைகள் மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் உள்ளிட்ட தொகையை வசூலிப்பதற்காக, பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 – உடன் படிக்க – பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 6, 8 & 9 ன் கீழான ஏற்பாடுகளின் படி, **"இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்றவற்றுடன்"** மற்றும் **"திரும்ப பெறத்தகாத வகையில்"** என்ற அடிப்படையில் ஆன்லைன் மின்னணு ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

வ. எண்	கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் பெயர்	கடன் கணக்கு எண் & விற்கும் வங்கி	ட்ரஸ்ட் பெயர்	இந்த நாளிடப்பட்ட சர்ஃபாசி அறிவிப்பு படி மொத்த நிலுவைத்தொகை	சுவாதீன வகை மற்றும் தேதி	ஆய்வு தேதி	சொத்தின் வகை மற்றும் பரப்பு	டேவணித் தொகை (EMD)	அடிப்படை விலை	மின்னணு ஏல தேதி & நேரம்
1	திரு.வெங்கட் ராமாஞ்சுலு சங்கரன்	419795 சிட்டி பேங்க்	Arcil Retail Loan Portfolio 048-A - Trust	09.12.2024 ம் தேதியின் படி, ரூ. 1,58,99,444.44/- (ரூபாய். ஒரு கோடியே ஐம்பத்து எட்டு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து நானூற்று நாற்பத்து நான்கு மற்றும் பைசா நாற்பத்து நான்கு மட்டும்) + மேற்கொண்டு வரும் வட்டி + சட்ட செலவுகள்	08.02.2024 அன்று இயற் சுவாதீனம்	28.02.2025 & 05.03.2025	ஷெட்யூல் A சொத்தில் உள்ள 4280 சதுர அடியில் உள்ள 318 சதுர அடி பிரிபடாத பங்கு மற்றும் மூன்றாவது தளத்தில் உள்ள 544 சதுர அடி பெண்ட் வீடு, 319 சதுர அடி கூடுதல் கட்டமைப்பு என மொத்தம் 863 சதுர அடி அடிச்சுற்று பரப்பு	ரூ. 5,30,000/- (ரூபாய். ஐந்து இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்)	ரூ. 53,00,000/- (ரூபாய். ஐம்பத்து மூன்று இலட்சம் மட்டும்)	13.03.2025 மாலை 3.00 மணிக்கு

ஏலம் விடப்படவுள்ள ஜாமீன் சொத்து விபரம் - ஷெட்யூல் A சொத்து - மத்திய சென்னை பதிவு மாவட்டம், மயிலாப்பூர் சார்பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட, ரீ சர்வே எண். 1594/74 ல் அமையப்பெற்று, சென்னை - 600 004, மயிலாப்பூர், சுல்லிவன் கார்டன் சாலை, ப்ளாக் எண். 33, கதவு எண். 120 மைக்கொண்ட 4280 சதுர அடி பரப்பளவு கொண்ட (533 பொது பாதை உட்பட) சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இதன் **இதன் எல்லைகளாவன - வடக்கு:** சர்வே எண். 1594/39 ல் அமைந்துள்ள செயின்ட் எப்பாஸ் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, **தெற்கு:** சுல்லிவன் கார்டன் சாலை மற்றும் மறு சர்வே எண். 1594/64 ல் உள்ள கதவு எண். 119 ல் அமையப்பெற்ற சொத்தின் பாகம், **கிழக்கு:** மறு சர்வே எண். 1594/65 ல் உள்ள சுல்லிவன் கார்டன் சாலை கதவு எண். 121 ல் உள்ள சொத்து, **மேற்கு:** மறு சர்வே எண். 1594/39 ல் உள்ள செயின்ட் எப்பாஸ் பெண்கள் உயர்நிலைப்பள்ளி சொத்து, ,மயிலாப்பூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் மத்திய சென்னை பதிவு மாவட்டங்களுக்கு உட்பட்டது.

ஷெட்யூல் B - இதன் மேற்கண்ட ஷெட்யூல் A சொத்தில் உள்ள 7.43% பிரிபடாத பங்கு (318 சதுர அடி பிரிபடாத பங்கு) இடத்துடன் கூடிய 863 சதுர அடி அடிச்சுற்று பரப்பு மற்றும் மூன்றாவது தளத்தில் உள்ள 544 சதுர அடி மற்றும் 319 சதுர அடி கூடுதல் பரப்பு (பொது பரப்பு உட்பட) என மூன்றாவது தளத்தில் உள்ள பெண்ட் வீடு.

ஆர்சில் - க்கு தெரிந்த நிலுவையிலுள்ள வில்லங்கங்கள்	கடன்தாரர் சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்., ஆனால் எந்த எதிர்வினை உத்தரவுப் பிறப்பிக்கப்படவில்லை	ஆர்சில் - க்கு சேரிந்த வில்லங்கங்கள் / நிலுவைகள்	இல்லை
ஏலத்துக்கு விலைப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி தேதி	12.03.2025 மாலை 05.00 மணி அல்லது அதற்கு முன்பு	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	விலைப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு
கேப்பு வரைவோலை எடுக்கப்பட வேண்டிய பெயர்	ட்ரஸ்ட் பெயர் என்ற களத்தில் குறிப்பிடப்பட்டவாறு	செலுத்த தக்க ஊர் சென்னை	
RTGS விபரங்கள்	**கணக்கு பெயர் - Arcil Retail Loan Portfolio 048 - A Trust ன் அறங்காவலராக செயல்படுவது. கணக்கு எண். 57500000049856 | கணக்கு வைத்துள்ள வங்கி : HDFC வங்கி | IFSC Code – HDFC0000542 | கிளை முகவரி -** கமலா மில்ஸ் காம்பவுண்டு, சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல், மும்பை - 400 013.		
தொடர்பு நபர் பெயர் & எண்.	திரு மகேஷ் பங்கிரா - 90041 73 256 (mahesh.bangera@arcil.co.in) திரு கார்த்திகேயன் ஜெயவேல் - 98414 15252 (karthikeyan.jayavel@arcil.co.in) திரு விஜயராஜ் - 95517 14945 (vijayaraj@arcil.co.in)		

வ. எண்	கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் பெயர்	கடன் கணக்கு எண் & விற்கும் வங்கி	ட்ரஸ்ட் பெயர்	இந்த நாளிடப்பட்ட சர்ஃபாசி அறிவிப்பு படி மொத்த நிலுவைத்தொகை	சுவாதீன வகை மற்றும் தேதி	ஆய்வு தேதி	சொத்தின் வகை மற்றும் பரப்பு	டேவணித் தொகை (EMD)	அடிப்படை விலை	மின்னணு ஏல தேதி & நேரம்
2	திரு விஜய் P	4030HL 83508828 பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிட்டெட்	Arcil Retail Loan Portfolio 042-C - Trust	05.02.2025 ம் தேதியின் படி, ரூ. 1,04,77,725.85/- (ரூபாய். ஒரு கோடியே நான்கு இலட்சத்து எழுபத்து ஏழாயிரத்து எழுநூற்று இருபத்து ஐந்து மற்றும் பைசா எண்பத்து ஐந்து மட்டும்) + மேற்கொண்டு வரும் வட்டி + சட்ட செலவுகள்	22.07.2023 அன்று இயற் சுவாதீனம்	07 & 14 மார்ச் 2025	1330 சதுர அடி இடம்.	ரூ. 5,65,300/- (ரூபாய். ஐந்து இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து முன்னூறு மட்டும்)	ரூ. 56,53,000/- (ரூபாய். ஐம்பத்து ஆறு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரம் மட்டும்)	25.03.2025 பிற்பகல் 2.00 மணிக்கு

ஏலம் விடப்படவுள்ள ஜாமீன் சொத்து விபரம் - விஜய் P என்பவருக்கு உரிமையான சொத்து - காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, சென்னை பதிவு மாவட்டம், குன்றத்தூர் சார்பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட, மாங்காடு கிராமம், கிராம நத்தம் பழைய சர்வே எண். 346/பகுதி, பட்டா படி சர்வே எண். 346/9 ல் அமையப்பெற்ற 1330 சதுர அடி பரப்பளவு கொண்ட காலி இடம் உள்ளிட்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இதன் **எல்லைகளாவன – வடக்கு:** அஷ்ரஃப்க்கு சொந்தமான சொத்து, **தெற்கு -** வள்ளிக்கு சொந்தமான சொத்து, **கிழக்கு:** காலி நிலம், **மேற்கு:** குன்றத்தூர் சாலை, குன்றத்தூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை பதிவு மாவட்டங்களுக்கு உட்பட்டது

ஆர்சில் - க்கு தெரிந்த நிலுவையிலுள்ள வில்லங்கங்கள்	இல்லை	ஆர்சில் - க்கு சேரிந்த வில்லங்கங்கள் / நிலுவைகள்	இல்லை
ஏலத்துக்கு விலைப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி தேதி	24.03.2025 மாலை 05.00 மணி அல்லது அதற்கு முன்பு	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	விலைப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு
கேப்பு வரைவோலை எடுக்கப்பட வேண்டிய பெயர்	ட்ரஸ்ட் பெயர் என்ற களத்தில் குறிப்பிடப்பட்டவாறு	செலுத்த தக்க ஊர் சென்னை	
RTGS விபரங்கள்	**கணக்கு பெயர் - Arcil Retail Loan Portfolio 042 - C Trust ன் அறங்காவலராக செயல்படுவது. கணக்கு எண். 57500000415314 | கணக்கு வைத்துள்ள வங்கி : HDFC வங்கி | IFSC Code - HDFC0000542, கிளை முகவரி - கமலா மில்ஸ் காம்பவுண்டு, சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல் - 400 013**		
தொடர்பு நபர் பெயர் & எண்.	திரு மகேஷ் பங்கிரா - 90041 73 256 (mahesh.bangera@arcil.co.in) திரு கார்த்திகேயன் ஜெயவேல் - 98414 15252 (karthikeyan.jayavel@arcil.co.in) திரு விஜயராஜ் - 95517 14945 (vijayaraj@arcil.co.in)		

விதிகள் மற்றும் நிபந்தனைகள் -

1). ஏல விற்பனை வலைதளம் https://auction.arcil.co.in மூலம் மின்னணு ஏல முறையில், விலைப்புள்ளி ஆவணத்தில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படி, அதில் குறிப்பிடப்பட்ட செயல்முறைகளின் படி நடைபெறும்.
2). இணை-ர்நெட் தொடர்பிழப்பு, நெட்வொர்க் பிரச்சினைகள், கணிப்பொறி செயலிழப்பு, மின் துண்டிப்பு ஆகியவற்றுக்கு அதிகாரப்பூர்வ அலுவலரோ (''அ.அ'') / ஆர்சில் நிறுவனமோ பொறுப்பல்ல.
3).